அந்த வகையில், மிகச் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து, சீரிய முறையில் பேரவைக் கூட்டம் நடைபெற நடவடிக்கை எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், சுகாதாரத் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா, எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர், IUML உறுப்பினர் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைக் கூட்டம் இங்கே நடைபெற தலைமைச் செயலாளர் தனிக் கவனம் செலுத்தி சிறப்புற பணியாற்றியிருக்கிறார்கள். அதேபோல, மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள்,பொறியாளர்கள் அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டார்கள். பேரவைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் குறைவான எண்ணிக்கையிலே அனுமதிக்கப்பட்டிருப்பினும், ஒருங்கிணைந்து செயல்பட்டு சிறப்பாகச் செயல்பட்டுள்ளார்கள். பத்திரிகையாளர்கள், ஊடக நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

12. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2020 செப்டம்பர் 16] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–12 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

15.பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் (முன்னாள் உறுப்பினர்களுக்கு மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 6–1–2020 ஆம் நாளிட்ட பொது (நிருவாகம் 1 & சட்டமன்றம்)த் துறையின் அரசாணை (நிலை) எண் 54–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. (i) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஒன்பதாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து 30–12–2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 198–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (பத்தாவது இடர்ப்பாடுகளைக் களைதல்) ஆணையினை இயற்றியது குறித்து 30–12–2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 200–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

3. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தம்) அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/2019) 2 ஆம் பிரிவு, 7 ஆம் பிரிவு, 10 ஆம் பிரிவு மற்றும் 14